# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் II பரீட்சை – 2020 யூலை

## (202) டிஜிடல் சூழலில் தகவல் முறைமைகள்

இந்த வினாத்தாள் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் புதிய அபிவிருத்திகள் மற்றும் போக்குகள் பற்றி அதிகமான கவனத்தைச் செலுத்தி, தகவல் தொழில்நுட்பத்தின் ஒட்டுமொத்த அம்சங்களையும் பரீட்சித்திருந்தது. இந்த வினாத்தாளை எதிர்கொள்ளும்போது தகவல் முறைமைகள் மீதான ஒழுக்கநெறி, சமூக மற்றும் சட்டச் சூழல் தாக்கங்கள் பற்றிய ஆழமான அறிவும் முக்கியமானது என்பது கவனிக்கப்பட வேண்டியதாகும்.

இந்த வினாத்தாள் A, B, C என மூன்று பகுதிகளை உள்ளடக்கியுள்ளது. சகல வினாக்களும் கட்டாயம் விடையளிக்கப்பட வேண்டிய வினாக்களாகும்.

### பகுதி A

**வினா இல. 01**

இங்கு ICT இலுள்ள அடிப்படை எண்ணக்கருக்கள் எளிமையான முறையில் பரீட்சிக்கப்பட்டன. பெரும்பாலும் சகல பரீட்சார்த்திகளும் இவ்வினாவுக்கு விடையளித்திருந்ததுடன் அவர்களுடைய செயலாற்றுகையும் திருப்திகரமாகக் காணப்பட்டது. பொதுவாக, இல. **1.1** தொடக்கம் **1.10** வரையான வினாக்களுக்கான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை மிகவும் வெற்றிகரமானதாக அமைந்திருந்தது. இவ்வினாவுக்கு உயர்ந்த புள்ளிகளைப் பெற்றிருந்த மாணவர்கள் ஒட்டுமொத்தமாக உயர்ந்தளவு புள்ளிகளை அண்மித்திருந்தனர்.

புதிய IT போக்குகள் / எண்ணக்கருக்கள் பற்றிய விளக்கம் மிகக் குறைந்தளவில் காணப்பட்டதன் காரணமாக சில மாணவர்கள் குறைந்தளவு புள்ளிகளையே பெற்றிருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

**இந்த வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.**

### பகுதி B

**வினா இல. 02**

தரவு மற்றும் தகவலுக்கிடையிலான வேறுபாட்டை இனங்காண்பதிலும் திறன்பேசி ஒன்றில் சேமிக்கக்கூடிய தனிப்பட்ட வாழ்க்கையுடன் தொடர்புடைய தகவல்களின் வகைகள் ஆகியன பற்றிய மாணவர்களின் ஆற்றல் பரீட்சிக்கப்பட்டது. **பகுதி B** இலுள்ள மற்றைய வினாக்களுடன் ஒப்பிடுகையில் பெரும்பாலான பரீட்சார்த்திகளால் இவ்வினாவுக்கு நியாயமானளவுக்கு சிறந்த புள்ளிகளைப் பெறக்கூடியதாக இருந்தது. பலரால் சகல மூன்று பகுதிகளுக்கும் சரியான விடைகளை எழுத முடிந்திருந்தது. உதாரணமாக, **பகுதி (a)** இற்கு, ஒரு அட்டவணை அமைப்பில் ஒப்பீடு ஒன்றாக விடையினை சமர்ப்பித்திருப்பின் அது சிறந்ததாக அமைந்திருக்கும். **பகுதி (c)** இற்கு சில பரீட்சார்த்திகள் நிழற்படங்கள், காணொளிகள், பயண இடங்களின் தரவுகள் போன்ற திறன்பேசி ஒன்றில் சேமிக்கக்கூடிய வெவ்வேறு வகைத் தரவுகளை எழுதுவதற்கு முடியாமற் போயிருந்தது. இந்தப் பகுதி மிகவும் இலகுவானதாக இருந்தபோதிலும் அவர்கள் அதனைச் சரியாக விளங்கிக் கொள்ளவில்லை.

**இந்த வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

## வினா இல. 03

இங்கு இணைய இணைப்புத் தொழில்நுட்பவியல்கள் மற்றும் வியாபார கட்டளைகளை ஒன்லைனில் பெறுதல் மற்றும் பொருட்களை விநியோகித்தல் ஆகிய வசதிகளை வழங்குவதற்கு வலைத்தளம் ஒன்றைக் கொண்டிருப்பதால் ஏற்படும் நன்மைகள் பற்றிப் பரீட்சிக்கப்பட்டது. அதிகளவான மாணவர்கள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்தனர். **பகுதி (b)** மற்றும் **பகுதி (c)** இற்கான செயலாற்றுகை திருப்திகரமாக இருந்த போதிலும், **பகுதி (a)** இற்கான செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்படவில்லை. Wi-fi ஒரு குறுகிய தூரத்திற்குள் மாத்திரமே பயன்படுத்த முடியும் என்பது பற்றி அவர்கள் அறிந்திருக்கவில்லை. மேலும், சிலர் **பகுதி (a)** மற்றும் **பகுதி (b)** இற்கு முறையே ‘‘இல்லை’’ மற்றும் ‘‘ஆம்’’ என்ற விடைகளை வழங்கியிருந்தனர். அவர்கள் அதற்கான நியாயத்தை அளித்திருக்கவில்லை.

பரீட்சார்த்திகள் இந்த வகையான வினாக்களை உறுதியாக எதிர்கொள்வதற்கு இந்தப் பாடப் பரப்புகளில் அதிகமான ஆற்றல்களை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்படவில்லை.**

## வினா இல. 04

வியாபாரப் பகுப்பாய்வு மற்றும் இலத்திரனியல் வர்த்தகத்தைப் பயன்படுத்துவதன் அனுகூலங்கள் பற்றிய அறிவு இங்கு பரீட்சிக்கப்பட்டது. பெரும்பாலும் சகல மாணவர்களும் இவ்வினாவுக்கு விடையளித்திருந்தனர். அதிகளவான பரீட்சார்த்திகள் **பகுதி (c)** இற்குச் சிறப்பாக செயலாற்றி யிருந்தனர். பலரால் முழுப் புள்ளிகளையும் பெறக்கூடியதாக இருந்தது.

எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகளின் **பகுதிகள் (a)** மற்றும் **(b)** இற்கான செயலாற்றுகை எதிர்பார்ப்பு மட்டத்தைப் பூர்த்தி செய்யவில்லை.

சில பரீட்சார்த்திகள் வினாவைச் சரியாக விளங்கிக் கொள்ளாமல் இருந்தமையைக் காணக் கூடியதாக இருந்தது.

வியாபாரப் பகுப்பாய்வு என்றால் என்ன என்பது பற்றி பரீட்சார்த்திகளிடம் குறைந்த அறிவே காணப்பட்டிருந்தது. இதனை **பகுதி (b)** இற்கு அவர்கள் அளித்த விடையிலிருந்து தெரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது.

இது மிகவும் நடைமுறையுடன் தொடர்புடைய வினாவாக இருந்த போதிலும், பரீட்சார்த்திகள் இந்தப் பரப்புகளில் மேலும் கவனம் செலுத்துவது முக்கியமானதாகும்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.**

## வினா இல. 05

பாதுகாப்பான முறையில் மக்கள் மற்றும் வியாபார நிறுவனங்களுடன் ஊடாடுவதற்கு சமூக வலையமைப்புகளை பயன்படுத்துகின்ற ஆற்றல் இங்கு பரீட்சிக்கப்பட்டது. அதிகளவான மாணவர்களால் இதற்குச் சரியான விடையை அளிக்க முடிந்திருந்தது. இதற்குக் காரணம் அவர்கள் இதில் போதுமானளவு அனுபவத்தைக் கொண்டிருந்திருக்கலாம்.

ஆனால் **பகுதி (b)** இற்குச் சில பரீட்சார்த்திகள், வலுவான கடவுச் சொற்கள், சந்தேகத்திற்கிடமான மின்னஞ்சல்களை அழித்தல் போன்ற இணையப் பாதுகாப்பை மேம்படுத்தக்கூடிய நடவடிக்கைகளை எடுப்பது பற்றி விளக்கத்தைக் கொண்டிருக்கிவில்லை. மேலும், சிலர் நடவடிக்கைகளைச் சரியாக இனங்கண்டிருந்த போதிலும், அவர்கள் பாதுகாப்புக்கான அத்தகைய நடவடிக்கைகளை விபரிக்காததால் அதற்கான முழுப் புள்ளிகளையும் பெற்றிருக்கவில்லை.

மாணவர்கள் தற்காலச் சூழமைவில் மிகவும் முக்கியமானதாக மாறிவருகின்ற இத்தகைய இணையப் பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றி அறிந்து கொள்வதற்கு நேரம் ஒதுக்குதல் வேண்டும்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

### வினா இல. 06

வியாபாரம் ஒன்றை ஆரம்பிக்கும் பொருட்டு தேவையான நிதியைத் திரட்டுவதற்காக சமூக ஊடகத்துடன் இணைந்த புதிய நிதிசார் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவது பற்றிய திறன்கள் இங்கு பரீட்சிக்கப்பட்டது.

அதிகமான மாணவர்களால் இவ்வினாவுக்கு வெற்றிகரமாக விடையளிக்க முடியவில்லை.

சரியான கூட்ட நிதியிடல் மாதிரியை இனங்காண்பதற்குத் தனியான புள்ளிகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், பெரும்பாலானவர்களால் சரியான மாதிரியை இனங்காண முடியவில்லை.

குறிப்பிடத்தக்களவான மாணவர்கள் **பகுதி (c)** இற்கு விடையளிக்கவில்லை.

இது வியாபார உலகில் பொதுவாகப் பயன்படுத்தப்படுகின்ற போதிலும், ஒரு கையளவு எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகளால் மாத்திரமே கட்டச் சங்கிலி எண்ணக்கருவைச் சரியாக அடையாளங் காண முடிந்திருந்தது.

இது பரீட்சார்த்திகள் புதிய IT போக்குகள் / எண்ணக்கருக்கள் பற்றி போதிய விழிப்புணர்வைக் கொண்டிருக்கவில்லை என்பதையே காட்டுகிறது. இந்தப் பாடப் பரப்புகள் மேலும் மேம்படுத்தப்பட வேண்டும் என்பது தெளிவாகத் தெரிகிறது.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.**

### வினா இல. 07

இந்த வினா விடய ஆய்வு வகையைச் சேர்ந்த முற்றடக்கமான ஒரு வினாவாகும். இது தகவல் முறைமை ஒன்றிலுள்ள சமூக ஊடகம் மற்றும் தேவையான பாதுகாப்பு முன்னெச்சரிக்கைகளைப் பயன்படுத்தி, நிறுவன வளத் திட்டமிடல் முறைமை, விளம்பரப்படுத்தல் ஆகியன தொடர்பான பரீட்சார்த்திகளின் விழிப்புணர்வைப் பரீட்சித்திருந்தது. பெரும்பாலும் எல்லா மாணவர்களும் இந்த வினாவுக்கு விடையளித்திருந்தனர். பெரும்பாலும் ஒவ்வொருவரும் **பகுதி (a), (b), (c)** ஆகியவற்றுக்குச் சரியாக விடையளித்திருந்தனர். ஆனால் சிலரே **பகுதி (d)** மற்றும் **(e)** இற்கு சரியாக விடையளித்திருந்தனர்.

பகுதி **(d)** இற்கு, சில பரீட்சார்த்திகளால் யூ ரியூப் சனல் மற்றும் இன்ஸ்ராகிராம் கணக்கு ஆகியவற்றால் ஆற்றப்படக்கூடிய இவ்விரண்டு தொழிற்பாடுகளை எடுதுவதற்குப் பதிலாக ஒவ்வொரு தொழிற்பாடுகளையே எழுத முடிந்திருந்தது.

பகுதி **(e)** இற்கு, சொற்பளவான மாணவர்கள் மாத்திரமே உள்ளக ரீதியாக இணைக்கப்பட்ட IS உட்கட்டமைப்பொன்றின் பாதுகாப்பு முன்னெச்சரிக்கைகள் பற்றி எழுதியிருந்தனர்.

இந்த வகையான வினாக்களுக்கு விடையெழுதுவதற்கு எண்ணக்கருக்கள் மற்றும் நடைமுறைப் பிரச்சினைகள் பற்றி அவர்கள் தெரிந்து கொள்ளுதல் வேண்டும்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது.**

\- - - -

## செயலாற்றுகை மட்டத்தை மேம்படுத்துவதற்கான உதவிக் குறிப்புகள்:

1. முழுப் பாடத்திட்டத்தையும் ஆழமாகப் படிக்கவும்.

2. வினாவை பல தடவைகள் வாசித்து வினாவில் கேட்கப்பட்டதற்கு மாத்திரம் விடையளிக்கவும். வினாவில் நேரடியான மற்றும் துல்லியமானதொரு விடை எதிர்பார்க்கப்படும் சந்தர்ப்பத்தில் தேவையற்ற விபரிப்புகளையும் விபரங்களையும் எழுத வேண்டாம்.

3. தகவல் தொழில்நுட்பவியலுடன் தொடர்புடைய பாடப்புத்தகங்கள், நூல்கள் கட்டுரைகள், சஞ்சிகைகள் மற்றும் ஏனையவற்றை வாசிக்கவும்.

4. விடைகளை எழுதும்போது தேவையாயின் உதாரணங்களை வழங்கி, ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் தகவல் தொழில்நுட்பவியலுடன் தொடர்புடைய கோட்பாட்டு ரீதியானதும் செய்முறை ரீதியானதுமான அறிவை சமர்ப்பிப்பது முக்கியமானதாகும்.

5. கையெழுத்து விளங்கக்கூடியதாக இருப்பதையும் விடைகளுக்கு இலக்கமிடப்பட்டிருப்பதையும் உரிய முறையில் உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

6. வினாப்பத்திரத்தில் தரப்பட்ட அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்.

7. உமது அறிவை மேம்படுத்திக் கொள்வதற்காக கடந்தகால வினாப்பத்திரங்கள் / முன்னோடி வினாத்தாள்கள் மற்றும் விடைகளை ஆராய்ந்து பார்க்கவும்.

8. நேரத்தை வினைத்திறனான வகையில் பயன்படுத்த பயிற்சி செய்யவும்.

9. விடைத்தாளை ஒப்படைப்பதற்கு முன்னர், விடைகள் சரியாக இலக்கமிடப்பட்டுள்ளனவா என்பதை இருமுறை பரீட்சிக்கவும்.

10. நல்ல தயார்படுத்தலுடனும் சித்தியடைதல் என்னும் நோக்கத்துடன் பரீட்சையை எழுதவும்.

- * * * -